காளியின் கருணையைத் தேடும்

க. ஜெனரல்!

விஞ்ஞானக் கண் வேண்டும் விளம்பர மந்திரி!

தெய்வத் தன்மையைத் தாங்கி நிற்கும் தேசியத் தாள்கள்!

மடமையில் மூழ்கிக்கிடக்கும் மக்கள்!

விஞ்ஞானக்கண் பெறுவதெங்கே? வேதனை தொலைவதெங்கே?

"வாழ்க்கையை, விஞ்ஞானக் கண்கொண்டு, மாணவர்கள் பார்க்கவேண்டும்."

"மக்களிடம் விஞ்ஞானநோக்கு இருந்திருக்குமானால், இன்றைய நிலையைக் காட்டிலும் மேலும் தீவிரமாக முன்னேற்ற மடைந்திருக்கக்கூடும். வகுப்புப் பிரச்னையும் ஒரு கணத்தில் மறைந்துபோயிருக்கும். மக்கள் விஞ்ஞானக் கோணத்திலிருந்து வாழ்க்கையைக் காணுவார்களானால், சமுதாயத்திலுள்ள பல பொது உண்மைகளைக் காணக்கூடும்."

— திவாகர் —

*   *   *

28—9—49-ந் தேதி, டில்லியிலுள்ள வங்காளக் காளி கோயிலுக்கு, கவர்னர் ஜெனரல் டாக்டர் ராஜகோபாலாச்சாரியார் சென்றிருந்தார். பழக்க வழக்கப்படி, யமுனை நதியில் வீசி எறியப்பட இருக்கிற துர்க்கை சிலையைக் கணுற்றார். அந்தச் சிலைக்கு கவர்னர் ஜெனரல், மலர்களைத் தூவினார். சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்தார் அர்ச்சகர்.

*   *   *

"குடந்தையில், ஒருவர் வீட்டில், ஒரு கிழவி இரண்டு வாரமாகத் தங்கி இருக்கிறாள். அவளுக்கு வயது 100-க்கு மேலிருக்கும் என்று சொல்லப்படுகிறது. அவள் உணவு ஒன்றும் உண்பதில்லை என்றும் 'தெய்வத்தன்மை' உடையவள் என்றும் சொல்லப்படுகிறது. அவள் தலையில் குடம் குடமாகத் தண்ணீர் கொட்டிய வண்ணம் இருக்கிறார்கள். அதனால் அவளுக்கு எந்தவிதக் கேடும் ஏற்படவில்லை. மக்கள் திரள்திரளாக வந்து, அவளை வணங்கி விபூதிப் பிரசாதம் பெற்றுக்கொண்டு செல்லுகின்றனர்."

*   *   *

இராயப்பேட்டை லாயிட் ரோட்டில் ஒரு வீட்டில் தேங்காய் ஒன்று காணாமல் போய்விட்டது. திருடனைக் கண்டுபிடிக்க அந்த வீட்டுக்காரர்கள், வேலைக்காரர்களை எல்லாம் கொதிக்கும் எண்ணெயில் கையை விடவேண்டுமென்று சொன்னார்களாம். ஒரு வேலைக்காரப் பெண் அவ்வாறு செய்யவே. கை வெந்துபோய், இராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறாள். போலீசார் இந்த வழக்கைப் பதிவு செய்து, மேற்கொண்டு புலன் விசாரித்து வருகின்றனர்.

*   *   *

விஞ்ஞானப்பார்வை வேண்டும்; விஞ்ஞானக் கண்கொண்டு வாழ்க்கையை நோக்கவேண்டும்; வாழ்க்கையின் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள விஞ்ஞானத்தின் துணையை நாடவேண்டும்.

விஞ்ஞானம்தான் மக்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும். காடு நாடானதும், மாந்திகள் மக்கள் நிலைபெற்றதும், மிருக உழைப்புக் குறைந்து சுகவாழ்வு பெருகினதும், விஞ்ஞான வளர்ச்சியால்தான். விஞ்ஞானம் தந்த மின்சார விளக்கொளியில், விஞ்ஞானம் ஆக்கித்தந்த ஆடைகளை அணிந்துகொண்டு, விஞ்ஞானத்தில் விளைந்த செய்தித்தாள்களைப் படித்துக்கொண்டு, விஞ்ஞானத்திலே என்ன இருக்கிறது, வேதத்திலே அனைத்தும்-அண்டசராசரங்களும் அடங்கி இருக்கின்றன என்று பேசுவோர், ஒன்று வாய்மையின் பொருள் தெரியாதவர்களாக இருக்கவேண்டும், அல்லது வடிகட்டின விஷமிகளாக இருக்கவேண்டும்.

விஞ்ஞான நோக்கு வேண்டுமென்கிறார் மக்களுக்கு, இந்திய சர்க்காரின் விளம்பர மந்திரி. பலப்பல சில்லறை விஷயங்களில், அர்த்தமில்லாமல், மக்கள் கவனஞ் செலுத்தி, கருத்தைப் பாழாக்கி, காலத்தை வீணாக்கும் கேவலம் — மன இருள் — விஞ்ஞான ஒளியால் அகலும் என்று போதிக்கிறார், பிரசார மந்திரி திவாகர். விஞ்ஞானப் பார்வையை மக்கள் பெற்றிருந்தால், வகுப்புவாதத் தொல்லை என்றே

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502   Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.   MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1]   சென்னை (1—10—49)   வெளியீடு (2—10—49)   [இதழ் 53

அமெரிக்கா ஏன் அலறுகிறது?

அணுகுண்டு பிறரிடமும் இருப்பதால் வரும் ஆபத்தென்ன?

ஒரே வீச்சினால் உலகத்தின் பெரும் பகுதியை அழித்துவிடக்கூடிய அணுக்குண்டு, தன்னிடம் இருப்பதாக உலக நாடுகளைமிரட்டி வந்த போது, அமெரிக்கா அதை மகிழ்ச்சிக்குரிய செயலாகக்கருதிச் செய்து வந்தது. ஜப்பானிய நகரை அழித்ததோடு, திருப்தியடையாத அமெரிக்கா, மேலும் அணுக்குண்டின் முழு ஆற்றலை அறிந்துகொள்வதற்காகப் பிகினியில் மற்றோர் அணுக்குண்டை வெடிக்கச்செய்து சோதனை செய்து பார்த்து, தன்னிடம் மட்டும் கிடைத்துவிட்ட இந்த மகத்தான அழிவுச்சக்தியைக் கொண்டு உலகையே பணிய வைத்து விட வேண்டுமென்னும் தோரணையில், அகம்பாவப் பேச்சு பேசித்திரிந்தது அமெரிக்கா.

ஆனால், வாயை மூடி மௌனியாகக் காட்சியளித்த ரஷ்யா, திடீரென்று ஒருவாரமாகப் பத்திரிகைகளின் முன்பக்கத்தில், கொட்டை எழுத்துத் தலைப்புகளில் அடிபடத் தொடங்கி விட்டது, அணுக்குண்டை ரஷ்யாவும் வைத்துக்கொண்டிருக்கிறது என்னும் காரணத்தால். ரஷ்யாவிடம் அணுக்குண்டு இருக்கிறது, ரஷ்யாவும் அதை ஓரிடத்தில்வெடிக்கச்செய்து சோதனை செய்து திருப்தி பெற்றுவிட்டது என்பதை அறிந்தவுடன், அமெரிக்கா அலறித்துடித்து, அல்லோலகல்லோலப்பட்டு, பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துவதும், அணுக்குண்டு உற்பத்தியை அதிகரிப்பதெனமுடிவு செய்வதும் விஞ்ஞானிகளையெல்லாம் இதில் ஈடுபடுமாறு அழைப்பதும், அணுக்குண்டை எதிர்த்துப்போராடுவதற்கான ஒரு பெரிய பயிற்சியை அமெரிக்க இராணுவம் முழுவதற்கும் அளிக்க வேண்டுமென்றும் பெரிய திட்டமிடுவதுமாயிருப்பதன் இரகசியம் என்ன?

அமெரிக்கா விடமுள்ளதைப் போலரஷ்யாவிடமும் அணுக்குண்டு உளதென்பதில் அமெரிக்கா அலறக் காரணம் என்ன?

ஒன்று அமெரிக்கரிடம் இருப்பதைவிட ரஷ்யரிடமுள்ள அணுக்குண்டு மகத்தான சக்திவாய்திருக்க வேண்டும்.

ரஷியர்கள் அமெரிக்கர்களிடமிருப்பதைவிட ஏராளமான அணுக்குண்டுகளை உற்பத்தி செய்து விட்டிருத்தல் வேண்டும்.

அல்லது அணுக்குண்டு உற்பத்தி செய்வதற்குரிய சாதனங்கள் அமெரிக்கரைவிட ரஷ்யர்களுக்கு ஏராளமாக இருக்கவேண்டும்.

எப்படியும் ரஷ்யாவின்கை தன்னைவிடப் பதின்மடங்கு மேலோங்கிவிட்டது என்பதை உணர்ந்தே அமெரிக்கா இந்தவிதமான அலறலுக்கு ஆளாகியிருக்கவேண்டும், எனத் தெரிகிறது.

அமெரிக்கா தன்னைப் பலப்படுத்திக்கொள்வதுடன், 130 கோடி டாலர் செலவில் வெளிநாடுகளுக்கும் ஆயுத உதவி செய்ய முனைந்திருக்கும்செயலானது, பொதுவாக மற்றோர் உலகப்போருக்கு ஆயத்தம் செய்வதாக இருக்கிறது.

உலக நிலையில் மற்றொரு போரைத் துவக்கி, அணுக்குண்டின் சக்தியைக் காட்டி, மனித சமூகத்தை நாசப்படுத்தும் வேலைக்கு வழிகோலுவதைவிட, சமாதானத்தைத் தக்கவாறு உலகில் நிலை நாட்டுவதற்கு, அமெரிக்காவில் இப்போதேற்பட்டுள்ள பரபரப்பு பயன்படுமானால் வல்லரசு நாடுகள் இத்துறையில் முயற்சி செய்யுமானால், உலகம் பிழைக்கும். இல்லையெனில் மனித சமூக நிர்மூல வேலைக்கு அடிகோலிய பழி அமெரிக்காவைச்சாரும் என்பதில் சந்தேகமில்லை.

தனி மனிதர் வாழ ஆண்டொன்றுக்கு 21 லக்ஷம் ரூபாய்

நம்நாட்டிலே மக்கள் பலர்-கோடிக்கணக்கானவர்கள் அரை வயிற்று உணவு கிடைக்காமல், வருமானம் போதாமல் அவதிப்படுகின்றனர். அதேபோன்று அரசாங்கமோ, எந்த நல்ல செயல் திட்டம் வந்தாலும் அதற்குப் பணமில்லை, பணமில்லை என்ற பேச்சே பெரிதாகக் கூறும் வழக்கமாகிவிட்டது

இந்த நிலையில், சமஸ்தானாதிபதிகளுக்கு லட்சக்கணக்கில் பணம் செலவிட்டு வருவானேன்? திருவாங்கூர் அரசருக்கு ஆண்டொன்றுக்கு 21 லக்ஷம் ரூபாய் அளிக்கப்படுமாம். ஒரு தனி மனிதருக்கு ஓர் ஆண்டுச் செலவுக்கு 21 லக்ஷம ரூபாய் எதற்காக? பல மக்கள் வறுமையில் வாட ஒன்றிருவர் பணத்தைக் கொட்டி அதன்மேல் புரள விடுவானேன்? இதற்குப் பெயர் சமஸ்தானாதிபதிகளை ஒழித்துவிட்டோம் என்பதா? பழையபடி இந்தச் சமஸ்தானங்கள் அவர்களிடமே இருந்தால்கூட இவ்வளவு பணம் அவர்களால் ஆண்டொன்றில் செலவிட்டிருக்க முடியாதே! அப்படியிருக்க மத்திய அரசாங்கம் இவ்வாறு செய்திருப்பது எந்த வகையில் நியாயம்? பொது மக்களுக்கு, நாட்டுக்கு அரசாங்கத்தின இச்செயலால நன்மை என்ன? அரசாங்கத்தின் போக்கு, பொதுமக்களின் நலனுக்குப் பாதகம் விளைவிப்பதாக இல்லையா? பொதுமக்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக.

திருப்பதியில் பக்தை பட்ட பாடு

கணவனைவிட்டு மற்றொருவருடன் வந்தார்—கத்திக்குத்து பெற்றார்

மசூலிப் பட்டணத்தைச் சேர்ந்த ராமாராவ் என்பவரின் மனைவி லக்ஷ்மீ காந்தம்மா திருப்பதி வேங்கடேசப் பெருமாளின் பக்தை. இந்தப் பக்தை, கங்கராஜு என்பவருடன் திருப்பதி சென்று, பெருமாளை வழிபட்ட பிறகு, திருப்பதி கோயில் சத்திரத்தில் 3 நாட்கள் தங்கினர். இடையில் இந்தப் பக்தையுடன் வந்த கங்கராஜுவே கத்தியால் குத்திவிட்டுத் தானும் குத்திக்கொண்டதாகத் தெரிகிறது.

இந் நிகழ்ச்சிக்குக் காரணம் எதுவாயிருப்பினும, திருப்பதி கடவுள் தன் பக்தையின் கதியை இப்படிப் பகிரங்கப் படுத்தி ஆஸ்பத்திரிக்குப் போகும் நிலைக்கு ஆக்கிவைத்துச் சோதிக்க வேண்டுமா?

வந்தவாசியிலிருந்து திருப்பதிக்கு யாத்திரை சென்ற பசுராம் என்பவர் மீது தேவஸ்தான பஸ் ஏற, அவர் அங்கேயே மாண்டார்.

இதிலிருந்து நாளாகவே, திருப்பதி பெருமாள், பக்தர்கள் தன்னைத் தேடி வருவதை விரும்புவதில்லை என்று தெரிகிறது. அங்குச் செல்லும் சில பக்தர்கள் பொருளை இழந்தும், உயிரை இழந்தும். மற்றும் பல தொல்லைகளுக்கு ஆளாகும் [illegible] செயல்களைத் திருப்பதி பெருமாள் அனுமதித்துக் கொண்டிருப்பதால், பக்தர்கள் தன்னைத் தேடித் திருப்பதி வருவதை விரும்பவில்லை என்றே [illegible]

மாலை மணி

சென்னை 1—10—49 சனிக்கிழமை

அமைதி! அமைதி!! அமைதி!!!

போர்! சிலருக்கு வேடிக்கை விளையாட்டு — பலருக்கு வேதனைச் சுழல்!

போர்! மனிதனை மனிதன் அழிக்க மேற்கொண்ட முறை —ஆதி நாட்களிலே, மனிதன் காட்டுமிராண்டியாக வாழ்ந்த காலங்களிலே!

போர்! ஒரு மக்கட் பிரிவு மற்றொரு மக்கட் பிரிவை அடக்கி ஆளக் கையாண்ட பழக்கம் — சிறிது நாகரிகம் வளர்ந்த நிலையிலே, வரலாற்றுக் காலத்துக்குச் சிறிது முன்பு!

போர்! ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது ஆதிக்கங்கொள்ளக் கடைபிடித்த முறை— நாகரிகம் முதிர்ந்த காலங்களிலே, வரலாற்றுச் சிறப்புடைய இற்றை நாட்களிலே!

போர்! அழிவின் படைபெடுப்பு-அமைதியைக் குலைக்கும் பெரும் சூறுவளி!

போர் என்றாலே இன்றைய நிலையில் அகிலஉலகமும் அலறுகின்றது, ஒரு சில வெறியர்களைத் தவிர.

போர்! பெரும் போர்! அகில உலகப் பெரும்போர்! என்ற ஒலி கேட்டவுடனே அமைதி என்னும் வழுக்கு மலைச் சரிவிலே ஏறிக்கொண்டிருக்கும் பொதுமனிதன், பீதியுற்று, வாழ்க்கைச் சஞ்சலம் என்னும் பெரும் பள்ளத்தாக்கில் வீழ்த்தப்பட்டுவிடுகிறான். இம்மாதிரி இருபதாவது நூற்றாண்டுப் பொது மனிதன், இரண்டு தடவை வீழ்ந்து, எழுந்திருந்திருக்கிறான்.

உலகப் பெரும் போர் மூளுகிறது என்ற பேச்சு செவியில் விழுந்தவுடன், மக்கள் கண்முன் வரும் காட்சிகள், அமைதி நீங்குவது — அலங்கோலம் தலைவிரித்தாடுவது— அழகு நகரம் அழிவது-மக்கள் அலறித் துடிப்பது — அகதிகள் ஓடுவது — பிணங்கள் வீழ்வது—மண்டைகள் சிதறுவது-குருதி வெள்ளம் பாய்வது — குவலயம் கலங்குவது போன்ற இவையே யாகும்.

இடைக்காலங்களில் உலகம் தனி மனிதர்களின் வேட்டைக் காடுகளாய்ப் பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது பொருளாதாரம் இரு நாடுகளை மோதவிட்டுவிட்டு வேடிக்கைப் பார்க்கிறது.

தனி மனிதன் வெறிபிடித்த நிலை போய், நாட்டாட்சி முறைகளே அத்தகைய வெறி கொண்டு பிற நாடுகளை அடக்கி, ஆண்டு, ஆதிக்கங் கொண்டு, தின்று, கொழுத்து, வெறியாட்டம் ஆட முனைந்திருக்கின்றன. ஆதிக்க வெறி பிடித்த முதலாளித்துவ நாடுகள் மீண்டும் ஒரு உலகப் பெரும் போரை விரும்பி நிற்கின்றன, வயிறூரக் குருதி குடித்துக் கும்மாளம் போடலாம் என்று.

உலகப் பெரும் போரால் நலிவுற்று, வருந்தி, வாடுவோர் ஏழைகள்—பாட்டாளிகள்—தொழிலாளிகள் எனப்படுவோரே. பெரும் போரால் வாழ்க்கை வசதி பெருகப் பெறுவோர் பணக்காரர்கள் — முதலாளிகள். பெரும் போரால் அயல் நாடுகளில் ஆதிக்கம் பெறலாம் என்று கருதி, முதலாளிகளின் பிடியில் சிக்கியுள்ள முதலாளித்துவ நாடுகள், மீண்டும் ஒரு பெரும் போரைத் துவக்க ஆயத்தம் செய்துகொண்டிருக்கின்றன.

முதலாளித்துவ நாடுகள், முதலாளித்துவ மனப்பான்மைக்கு இடங்கொடுக்காமல் எந்த வொரு சக்தி எங்கெல்லாம் திரண்டு காணப்படுகிறதோ, அங்கிருந்தெல்லாம் அந்த சக்தியை ஆய்ந்தெடுதது அழித்துவிட்டுத் தன்னுடைய இலாப வேட்டைப் பாதையைச் செம்மையுற வகுத்துக் கொள்ள இன்று முயலுகின்றன, அதன் எக்களிப்பு ஒலிகளே, போர் முழக்கங்களாக வெளிவருகின்றன. அந்தப் போர் முழக்கங்கள் முதலாளித்துவ உலகிற்கு இன்பக் கீதமாக விளங்குகின்றன; அதே முழக்கங்கள் பாட்டாளி உலகிற்கு வேதனையைக் கிளப்பும் வெறிக் கூச்சலாக இருக்கின்றன!

இன்றைய நிலையில் அமெரிக்காவும் ரஷ்யாவும் மோதக் கூடுமோ, அதனால் உலகப் பெரும் போர் மூண்டுவிடுமோ என்ற பெரும் பீதி உலகப் பொது மக்களிடத்திலே நின்று நிலவி வருகிறது. அமெரிக்கா—ரஷ்யா இரு பெரும் சக்திகளின் சின்னங்களாக இருந்துவருகின்றன!

அமெரிக்கா, ரஷ்யா முன் முறைத்து நின்றுபார்க்கிறது, வரிந்து கட்டிக்கொண்டு, தோள்தட்டி, துடைதட்டி, நடை எடுத்துப் போட்டுப் பார்க்கிறது. அமெரிக்காவின் இந்த முன்னேற்பாடுகளைப் பார்க்கும்போது, உலக அமைதி குலையுமோ என்ற ஐயம், பெருங் கலக்கத்தை உண்டுபண்ணுகிறது.

ஆதிக்க ஆசை அமெரிக்காவை ஆட்டிப்படைக்கிறது என்பதுமட்டும் நமக்கு நன்கு வெட்டவெளிச்சமாகத் தெரிகிறது. ஆனால் அத்தகைய ஆசை ரஷ்யாவிடத்தில் இருக்குமோ என்று கண்டறிய ஆதாரம் எதுவும் இருப்பதாக இதுவரையில் தெரியவில்லை!

அமெரிக்கா, உலகிலுள்ள பல்வேறு நாடுகளையும் தன் பக்கபலமாகக் கொண்டுவந்து நிறுத்தி வைத்துக்கொள்ள வேண்டி பணக் குண்டுகளைக் காட்டி வருவதை உலக மக்கள் நன்கு அறிந்துகொண்டு இருக்கிறார்கள். அமெரிக்கா டாலர் குண்டைக் காட்டுவதைப்போல ரஷ்யா ரூபிள் குண்டைக் காட்டுவதில்லை. காட்ட வேண்டிய அவசியத்தை ரஷ்யா ஏற்படுத்திக்கொள்ளவில்லை, இந்த இரண்டு நாடுகளின் செய்கைகளின் இடையேயுள்ள சூட்சமத்தை அறிந்துகொண்டால், ஆதிக்க ஆசை எங்கு இருந்து கிளம்புகிறது என்பதை எளிதில் அறிந்துகொள்ளலாம். அமெரிக்காவிடத்திலிருந்துதான் என்பது சொல்லாமலே விளங்கும்.

மேலும் அமெரிக்கா, அட்லாண்டிக் ஒப்பந்தம் என்ற பெயரால் பல நாடுகள் இணைந்த வளையம் ஒன்றை உருவாக்கியது.

அந்த வளையம் மேற்கு ஐரோப்பா யூனியன் என்ற வளையத்தோடு இணைக்கப்பட்டுவிட்டது. அந்த வளையத்தோடு காமன்வெல்த் வளையத்தை இணைத்து அமெரிக்காவிடம் புகழ்மாலை பெற்றுள்ளது பிரிட்டன். காமன்வெல்த் வளையத்தோடு பசிபிக் என்ற வளையம் புதிதாக மாட்டப்படுகிறது. பசிபிக் வளையத்தை, அட்லாண்டிக் வளையத்தோடு அமெரிக்கா இறுதியில் இணைத்து நிற்கிறது. இவ்வாறு உலகத்தை ஒரு கோர்வையான வளையங்களால் வளைத்துவைக்கவேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு அவ்வளவு அக்கரையுடன் ஏற்படுவானேன்?

ரஷ்யாவை எதிர்த்துத், தன்னுடைய நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? முதலாளித்துவப் பிடியில் சிக்கியுள்ள நாடுகள் அனைத்தும் அமெரிக்காவின் பக்கம் இணைந்து நிற்க ஒப்பம் கொடுத்துவிட்டன. இந்த நிலையில் காமன்வெல்த் வளையத்தில் நின்று, அமெரிக்காவின் சுற்றுவளையத்திற்கு வலிவூட்டும் பணியை, நாம் வாழும் இந்தியத் துணைக்கண்ட ஆட்சி ஏற்றுக் கொண்டுள்ளது முறையா?

பாட்டாளி மக்கள் உலகம் போரை விரும்பவில்லை! அவர்கள் விரும்புவது அமைதி! அமைதி!! அமைதி!!! அதனை அடுத்து சுகவாழ்வு! பாட்டாளி அரசுகளும் போரை விரும்பவில்லை! ஆனால் முதலாளித்துவ மனப்பான்மைகொண்ட அரசுகள் போரை விரும்புகின்றன; போரை விரும்பவில்லை என்று காட்டிக்கொண்டாலும் போர் வெறிகொண்டலையும் நாடுகளின் பக்கம் சாய்ந்திருக்கின்றன — சாய்த்துவிடப்படுகின்றன!

ஆகவே உலக அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமானால், ஆட்சிப்பீடங்கள் ஆணவ முதலாளித்துவ மனப்பான்மையினால் ஆக்கப்படாமல், பாட்டாளியின் நலங்கோரும் நல்ல பண்பினால் ஆக்கப்பட வேண்டும்! பாட்டாளி உலகம் மிகப் பெரிதுதான். என்றாலும் தெளிவு ஏற்படவில்லை! எனவேதான் முதலாளித்துவ ஆதிக்க வெறி, பாட்டாளி உலகத்தின் மீது குதிரைச் சவாரி செய்கிறது!

பாட்டாளி உலகைத் தெளிவு பெறச்செய்யவும், அது தெளிவு பெற்று, ஆதிக்கவெறி ஆரம்பமாகும் அடித்தளத்தை அழித்தொழிக்க, அதற்கு ஊக்கமளித்து, உணர்வு ஊட்டவுமே, அமைதி நாள் அகில உலகிலும் கொண்டாடப்படுகிறது! அமைதி நாள் அக்டோபர் 2ம் நாள் என்று பாரிசில் கூடிய அகில உலக அமைதி மாநாடு, முடிவு செய்துள்ளது! அந்த முடிவை நாம் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்!

அகில உலகிலும் அமைதியை நிலைநாட்டும் முன்னணிப் படையினர் முனைந்து பணிபுரியவே அக்டோபர் 2-ம நாள்! அந்த நாளில் அந்த அரும்பணியினைப் புரிய அனைத்துலகப் பாட்டாளி மக்களும் முந்துவார்களாக!

அகில உலக அமைதியைக் கெடுக்கும் ஆதிக்க வெறி மனப்பான்மை எங்கிருந்து, எப்படி, எவ்வுருவில் வந்த போதிலும், அதனை முறியடிக்கவேண்டியது, அமைதி வேண்டி நிற்கும் மக்கள் அனைவருடையவுமான கடமையாகும்.

அமெரிக்க ஆதிக்கவெறி வலையில் சிக்கிச் சீரழியாமல், இந்தியத் துணைக்கண்டத்தை மீட்டவேண்டிய பொறுப்பு, இந்தியத் துணைக்கண்ட மக்களின் நீங்காக் கடமையாகும். அப்படிப்பட்ட கடமையை நிறைவேற்றிவைக்கவே அக்டோபர் 2ம் நாள் வருகிறது!

உலகம் உய்யப்போர் அல்ல உரிய வழி, அமைதியை நிலைநாட்டுவதே! இன்று நாம் விரும்புவது— வேண்டுவது— வற்புறுத்துவது அமைதி! அமைதி!! அமைதி!!!

அக்டோபர் 2- அமைதி நாள்!

அகில உலக அமைதி அவையின் வேண்டுகோள்

(கருத்துச் சுருக்கம்)

பாரிஸில் கூடிய அகில உலக அமைதி அவை (அகில உலக சமாதானக் காங்கிரஸ்) கீழ்க்கண்ட அறிக்கையை அகில உலகத்திற்கும் வெளியிட்டுள்ளது.

1914 ஆகஸ்ட் 2ம் நாள், முதல் உலகப் பெரும்போரும், 1939 செப்டெம்பர் 1ம் நாள், இரண்டாவது உலகப்பெரும் போரும் துவங்குவதற்குரிய நிலைமைகள், உலகில் எவ்வண்ணமிருந்தனவோ, அவ்வாறே இன்றைய உலக நிலையுமிருக்கிறது.

உலகஅமைதி,பேராபத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கிறது.

மேற் கூறிய இரண்டு போர்களும், நடந்த காலமும், நிலைமையும், முறையும் வேறு. இனியொரு போர் துவக்கப்பட்டால், ஏற்படும் நிலைமை வேறு.

அட்லாண்டிக் ஒப்பந்தம் உருவானதும், ஜப்பான், ஜெர்மன் நாடுகளை மீண்டும் படைக்கலங்கள் கொண்டனவாக ஆக்க முயற்சிப்பதும், கிரேக்க மக்களுக்கெதிரான நடவடிக்கைக்காரர்களுக்கு உறுதி வழங்குவதும், குடியேற்ற நாடுகளைப் பெற விரும்பி நடைபெறும் தகராறுகளும், மீண்டும் உலகைப் போர்த்தொல்லைக்கு உள்ளாக்கி விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலையை உண்டு பண்ணியிருக்கின்றன.

கருத்து, கோட்பாடு, கொள்கை, கலை, நிறம் ஆகிய எவ்வேறுபாடுமின்றி, மனித இனம் முழுவதினுடைய உயிரையும், உரிமையையும் பாதுகாக்க, இலட்சக்கணக்கான மக்கள் உலக அமைதி அவைக்கு ஆதரவளிக்கத் திரண்டுள்ளனர்.

ஐந்து கண்டங்களிலும் உள்ள 72க்கு மேற்பட்ட நாடுகளில், அமைதி பரப்பும் சக்திகள் ஒன்றுகத்திரட்டப்பட்டு வருகின்றன.

போர் வெறி பிடித்தவர்களால் உலக அமைதிக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை அடியோடு ஒழிக்க, உறுதியான, பரந்த நடவடிக்கைகளில், அமைதிச சக்திகள் ஈடுபட வேண்டும்.

இந்நோக்கங் கொண்டே, அக்டோபர் 2-ம் நாளை அமைதிக்குரிய அகில உலக நாளாகக் கொண்டாட உலக அமைதி நிலை நாட்டும் அவைமுடிவு செய்துள்ளது.

அதனையொட்டி, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அமைதி பரப்பும சக்திகள் மாபெரும் பிரசார— போராட்டத்தின் மூலம், அமைதியைப் பாதுகாக்கும் சக்தியை வெளிப்படுத்த வேண்டும.

நிறுத்தவேண்டும்

'புள்ளி விவர வெற்றிக்காக, உணவுபங்கீட்டின் அளவை மேலும் மேலும் குறைத்துக்கொண்டு போவதை இனியும மேற்கொள்ளக் கூடாது. இது, நாட்டு மக்களின் பொது சுகமும ஜீவ சக்தியும் பாதிக்கும் நிலைக்குக கொண்டுவந்துவிடும்.'

—ஹிந்து